## அதற்கான காரணங்கள் மற்றும் பின்விளைவுகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் சமகால அடிமைத்துவ வடிவங்கள் குறித்த விசேட அறிக்கையாளர்

## இலங்கைக்கான விஜயம், நவம்பர் 26 – டிசம்பர் 3, 2021

## விஜயத்தின் முடிவின் போது வெளியிடப்படும் அறிக்கை

**ஊடகத் துறை உறுப்பினர்களே, அன்பார்ந்த பங்கேற்பாளர்களே,**

இலங்கைக்கான எனது உத்தியோகபூர்வ விஜயத்தின் முடிவின் போது நான் இன்று உங்களிடம் உரையாற்றுகின்றேன். இலங்கைக்கான இந்த விஜயம் அரசாங்கத்தின் அழைப்பின் போரில் 2021 நவம்பர் 26ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 3ஆம் திகதி வரையில் இடம்பெற்றது.

ஆடைக்கைத்தொழில் துறை, தேயிலைப் பெருந்தோட்டங்கள் மற்றும் வீட்டு வேலை என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பல்வேறு பொருளாதாரத் துறைகளில் ஊழியம் தொடர்பான நிலைமைகளை மதிப்பீடு செய்வதே எனது பயணத்தின் நோக்கமாகும். சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் கொள்கைகள் என்பன எந்த அளவுக்கு அமுல் செய்யப்பட்டு வருகின்றன என்பதனை பரீட்சித்துப் பார்ப்பதும், இலங்கையின் குடிபெயர் தொழிலாளர்களையும் உள்ளடக்கிய விதத்தில் தொழிலாளர்கள் கண்ணியமான வேலையைப் பெற்றுக்கொள்ளும் விடயத்திற்கு அமைப்பு ரீதியான தடைகள் எவையேனும் இருந்து வருகின்றனவா என்பதனை பரீட்சித்துப் பார்ப்பதும் எனது நோக்கமாக இருந்தது.

கீழே தரப்பட்டுள்ள அறிக்கை எனது விஜயத்தின் போது சேகரிக்கப்பட்ட தகல்களை அடிப்படையாகக் கொண்ட எனது பூர்வாங்க முடிவுகளை எடுத்து விளக்குகின்றது. இது தொடர்பான எனது இறுதியறிக்கை 2022 செப்டம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

இலங்கைக்கு ஒரு விஜயத்தை மேற்கொள்ளுமாறு எனக்கு அழைப்பு விடுத்தமைக்காகவும், இந்த விஜயத்தின் போது என்னையும், எனது தூதுக் குழுவினரையும் வரவேற்று, உபசரித்தமைக்காகவும் இலங்கை அரசாங்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நேரம் ஒதுக்கி, என்னைச் சந்தித்த தேசிய மட்டத்திலான அரசாங்க அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும், அதே போல் சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள், ஊழியச் சுரண்டலினால் பாதிக்கப்பட்டவர்கள், உள்ளகப் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் நாடு திரும்பிய தொழிலாளர்கள், போன்ற தரப்புக்களுக்கும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஐ நா முகவரகங்கள் போன்ற எம்முடன் உரையாடல்களை நடத்தியவர்களுக்கும் இங்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், எனது விஜயத்தின் போது வெளி விவகார அமைச்சில் தொடர்புப் புள்ளியாகச் செயற்பட்ட தரப்பினருக்கும், அவர்கள் வழங்கிய உதவி மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றுக்கும் நான் அதே விதத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஐந்து நாட்களின் போது நான் கண்டி மாவட்டத்தில் அமைந்திருக்கும் பல்வேறு தேயிலைத் தோட்டங்கள், கட்டுநாயக்கச் சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைகள் என்பவற்றுக்கு விஜயம் செய்ததுடன், பல்வேறு மாகாணங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுடன் இணையவழி ஊடான சந்திப்புக்களை நடத்தினேன்.

**சாதகமான அம்சங்கள்**

என்னுடைய பூர்வாங்க முடிவுகளின் பிரகாரம், சமகால அடிமைத்துவ வடிவங்களைக் கவனத்தில் எடுப்பதற்கென அரசாங்கம் எடுத்திருக்கும் சாதகமான படிமுறைகளை எடுத்துக் காட்டுவதன் மூலம் இதனை ஆரம்பிக்க விரும்புகிறேன்.

(நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி இலக்கு 8.7 ஐ சாதித்துக் கொள்ளும் பொருட்டு துரிதமாக செயற்படுவதற்கான தமது விருப்பினைத் தெரிவித்திருக்கும் நாடுகளின்) அணி 8.7 இல் இணைந்திருக்கும் ஒரு நாடு (Pathafinder Country) என்ற முறையில், இலங்கை நிலைத்து நிற்கககூடிய அபிவிருத்திக் குறிக்கோள் 8.7 ஐ சாதித்துக் கொள்வதற்கான அதன் கடப்பாட்டினை எடுத்துக் காட்டியுள்ளது. இந்த இலக்கு அரசுகள் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறது:

''பலவந்தமான ஊழியத்தை ஒழிப்பதற்கும், நவீன அடிமைத்துவம் மற்றும் மனித விற்பனை என்பவற்றை முடிவுக்கு கொண்டு வருவதற்கும், சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் சிறுவர்களைச் சிப்பாய்களாக பயன்படுத்திக் கொள்ளல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் சிறுவர் ஊழியம் தொடர்பான மிக மோசமான வடிவங்களைத் தடை செய்து, ஒழிப்பதற்கும் உடனடியாக வினைத்திறன் மிக்க வழிமுறைகளை எடுத்து, 2025ஆம் ஆண்டின் முடிவுக்குள் அதன் அனைத்து வடிவங்களிலும் சிறுவர் ஊழியத்தை முடிவுக்கு கொண்டு வருதல்''.

இது தொடர்பாக நிகழ்த்தப்பட்டிருக்கும் குறிப்பிடத்தக்க ஒரு சாதனை 2013ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்ட ''சிறுவர் ஊழியம் இல்லாத வலயம்'' என்ற பேயரிலான முன்னோடிக் கருத்திட்டமாகும். இந்த மாவட்டத்தின் பொருளாதாரக் கட்டமைப்பு சிறுவர் ஊழியத்தை அதிகரிக்கச் செய்யக்கூடியதாக இருந்து வந்த காரணத்தினால் இந்த மாவட்டம் தெரிவு செய்யப்பட்டதாக அறிய முடிகின்றுது. சிறுவர் ஊழியத்திற்கான மூல காரணங்களை ஆழமாக பகுப்பாய்வு செய்த்தனையடுத்து, இம் மாவட்டத்திற்கென ''ஒட்டுமொத்த சிறுவர் அபிவிருத்தித் திட்டம்'' ஒன்று அபிவிருத்தி செய்யப்பட்டது. அந்தத் திட்டத்தில் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுவர்கள் ''பாதுகாக்கப்பட்ட சிறுவர்கள்'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தார்கள். சிறுவர்களை வேலையில் அமர்த்தியிருக்கும் தொழில் நிறுவனங்களுக்கு, குற்றவியல் வழக்கு நடைமுறைகளை எதிர்கொள்ளாத நிலையில் அச்சிறுவர் தொழிலாளர்களை விடுவிப்பதற்கென கருணைக் காலம் வழங்கப்பட்டிருந்தது. அரசாங்கம் சிவில் சமூக அமைப்புக்களுடன் கூட்டாக இணைந்து பெற்றோர், சமூகத் தலைவர்கள், ஆசிரியர்கள், சுகாதார மற்றும் சமூகப் பணியாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில் வழங்குனர்கள் ஆகிய தரப்புக்களுடன் அது தொடர்பான விழிப்புணர்வைத் தூண்டும் பொருட்டும், சிறுவர் ஊழியத்தைத் தடுக்கும் பொருட்டும் பல சந்திப்புக்களை நடத்தியிருந்தது. மேலும், அபாய நிலையிலிருந்து வரும் சிறுவர்களை இனங்காண்பதற்கென அரசாங்கம் பாடசாலைகளில் முன்னெச்சரிக்கை முறை ஒன்றையும் ஸ்தாபித்தது. இந்த முயற்சிகள் காரணமாக, இரத்தினபுரி மாவட்டம் 2016ஆம் ஆண்டளவில் சிறுவர் ஊழியத்தை 60 சதவீதத்தினால் வெற்றிகரமாக குறைத்துக் கொண்டது எனக் கூறப்படுகிறது. அதாவது, சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புக்களிடமிருந்து கிடைத்த புள்ளிவிபரங்களின் பிரகாரம் இந்த எண்ணிக்கை 107,000 இலிருந்து 43,000 ஆக குறைவடைந்திருந்தது.

சிறுவர் ஊழியத்தைக் கவனத்திலெடுக்கும் பொருட்டு அரசாங்கம் வேறு சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது. உதாரணமாக, பெண்கள், இள வயது நபர்கள் மற்றும் பிள்ளைகள் ஆகியோரை வேலைக்கு அமர்த்தும் சட்டம்; கடைகள் மற்றும் அலுவலக சிப்பந்திகள் சட்டம்; (இந்தியத் தொழிலாளர்) குறைந்தபட்ச வேதன கட்டளைச் சட்டம் மற்றும் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் ஆகிய சட்டங்கள் தொடர்பாக 2021 ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு திருத்தத்திற்கு ஊடாக வேலையில் அமர்த்துவதற்கான குறைந்தபட்ச வயது 14 இலிருந்து 16 ஆக உயர்த்தப்பட்டது. இது கட்டாயக் கல்வி வயது 16 ஆக இருந்து வருவதுடன் இணைந்த விதத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், 18 வயதிற்கு குறைந்த பிள்ளைகள் தொடர்பாக தடை செய்யப்பட்டிருக்கும் அபாயகரமான வேலைகளை உள்ளடக்கியிருக்கும் பட்டியல், வீட்டு வேலையையும் உள்ளடக்கிய விதத்தில் 71 தொழில்கள் தொடர்பாக நீடிட்க்கப்பட்டுள்ளது (1956 ஆம் ஆண்டின் பெண்கள், இள வயது நபர்கள் மற்றும் பிள்ளைகள் ஆகியோரை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பான சட்டத்தின் கீழான ஓர் ஒழுங்குவிதிக்கு ஊடாக இந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டிருந்தது). வீட்டு வேலை முன்னர் ஒழுங்குமுறைபடுத்தப்படாத ஒரு தொழில் என அடையாளப்படுத்தப்பட்டிருந்ததுடன், இது மனித உரிமைகள் கண்ணோட்டத்தில் தீவிரமான கரிசனைகளை எழுப்பியிருந்தது. மேலும், எத்தகைய விதிவிலக்குகளும் இல்லாத விதத்தில் சிறுவர் திருமணங்களைத் தடை செய்வதற்கான ஒரு சட்டத் திருத்தம் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்ற விடயமும் என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஏனைய நடவடிக்கைகளும் எனக்கு உற்சாகமூட்டுபவையாக இருந்து வருகின்றன. உதாரணமாக, பலவந்த ஊழியம் தொடர்பான சமவாயத்தின் குறிப்புப் பத்திரம் 29 ஐ அத்தாட்சிப்படுத்தியிருக்கும் ஒரு சில ஆசிய நாடுகளில்

ஒன்றாக இலங்கை இருந்து வருவதுடன், பலவந்தமான ஊழியத்தை கையாண்டு, அதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கான இலங்கையின் கடப்பாட்டினை அது தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. மேலும், அரசாங்கம் மனித வியாபாரத்தையும் (Human Trafficking) உள்ளடக்கிய விதத்தில் பல்வேறு குற்றச் செயல்களுக்குத் தண்டனை அளிக்கும் பொருட்டு தண்டனைச் சட்டக் கோவையைத் திருத்தியுள்ளது. தேச எல்லைகள் கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கு எதிரான ஐ நா சமவாயம் 2000 மற்றும் ஆட்களை வியாபாரம் செய்வதனை - குறிப்பாக, பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோரை வியாபாரம் செய்வதனை - தடுத்து, ஒடுக்கி, அதற்கு தண்டனை அளிப்பதற்கான குறிப்புப் பத்திரம் போன்ற சர்வதேச தர நியமங்களின் பிரகாரம் இது மேற்கொள்ளப்பட்டது.

ஏனைய சட்ட முன்மொழிவுகள் தொடர்பாக, பெண்கள் போன்ற எளிதில் பாதிப்படையக்கூடிய குடித்தொகையினரை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வரும் நுண் நிதிக் கம்பனிகளின் செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும், இலங்கை தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்து செல்வதற்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு நெறி தவறிய மற்றும் சட்ட விரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் உப ஆட்சேர்ப்பு முகவர்களை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் சட்டங்களை இயற்றும் விடயத்தை அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது.

இது தொடர்பாக கிடைக்கும் சேவைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், மக்களுக்கு உதவி வழங்குவதற்குமென கிராமப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய விதத்தில் நாட்டின் பல்வேறு பாகங்களில் அரசாங்கம் தொழில் பரிசோதகர்களின் நடமாடும் அலகுகளை அறிமுகம் செய்து வைத்திருப்பதாகவும் என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக, இலங்கையில் செயற்பட்டு வரும் வலுவான தொழிற்சங்கங்கள் குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.ஒரு சில பின்னடைவுகள் மற்றும் அவற்றை அரசியல்மயமாக்குவதற்கான போக்கு என்பவற்றுக்கு மத்தியிலும் கூட, பெரும்பாலான தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் உரிமைகளுக்கென முனைப்பான விதத்தில் போராடி வருகின்றன. அதேபோல, சமகால அடிமைத்துவ வடிவங்களினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் இலங்கையின் சிவில் சமூக அமைப்புக்கள் தொடர்ந்தும் மிக முக்கியமான ஒரு வகி பங்கினை வகித்து வருகின்றன. இந்த விஜயத்தின் போது தகவல்கள் மற்றும் கருத்துக்கள் என்பவற்றைப் பரிமாறிக் கொள்வதற்கென பெருந்தொகையான தொழிற்சங்கங்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஆகிய தரப்புக்களுடன் சந்திப்புக்களை நடத்தக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

**கரிசனைக்குரிய துறைகள்**

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய முயற்சிகளுக்கு மத்தியிலும் கூட, எனது விஜயத்தின் போது என்னிடம் பாரதூரமான கரிசனைகள் எழுப்பப்பட்டிருந்தன. நவீன அடிமைத்துவ வடிவங்கள் இந்நாட்டில் இன்னமும் நிலவி வருகின்றன என்பதும், குறிப்பாக பிள்ளைகள், பெண்கள், இனத்துவ, மொழி மற்றும் சமயச் சிறுபான்மையினர் அதே போல வயது முதிர்ந்த நபர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் மிகவும் பலவீனமான நிலைமையில் இருந்து வருபவர்களை அவை பாதித்து வருகின்றன என்பதும் தெளிவாகும். அரசாங்கம் கூட்டணி 8.7 இல் இணைந்திருப்பதுடன், இந்த விடயங்கள் தொடர்பாக செயலூக்கத்துடன் செயற்பட்டு வரும் ஒரு நாடு என்ற முறையில் 2030ஆம் ஆண்டளவில் இந்த நடைமுறைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கென அரசாங்கம் தீர்க்கமான விதத்தில் முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகும்.

***சிறுவர்***

இலங்கையில் சிறுவர் உழைப்பு தொடர்ந்து இடம்பெற்று வருவதாக எனது விஜயத்தின் போது நான் தெரிந்து கொண்டேன். மொத்த சிறுவர் குடித்தொகையில் சுமார் 1 சதவீதத்தினர் ஏதோ ஒரு வகையைச் சேர்ந்த வேலைகளில் ஈடுபட்டு வரும் விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த வேலைகளில் பெரும்பாலானவை அபாயகரமானவை எனக் கருதப்படும் வேலைகள் ஆகும். வீட்டுத்துறை, விருந்தோம்பல் துறை, சுத்திகரிப்பு மற்றும் பொதுச் சேவைக் கைத்தொழில்கள் என்பவற்றில் இளம் பெண்களும், இளம் ஆண்களும் வேலை செய்து வருகின்றார்கள். ஏனையவர்கள் சுற்றுலாத் துறையில் பாலியல் ரீதியான சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக, இனத்துவச் சிறுபான்மை (உதாரணமாக, மலையத் தமிழர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்கள் போன்ற) குடித்தொகையினர் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிறுவர் உழைப்பு மிக மோசமானதாக இருந்து வருகின்றது. இந்தப் பிரதேசங்களில் வசித்து வரும் ஒரு சில சிறுவர்கள் பாடசாலைக் கல்வியை இடையில் விட்டுவிட்டு, தமது குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும்

பொருட்டு வேலை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர்.

கிடைத்த நேரடித் தகவல்களின் பிரகாரம், கொவிட் - 19 பெருந்தொற்று இந்நிலைமையை மிக மோசமான விதத்தில் தீவிரப்படுத்தியுள்ளது. தேசிய ரீதியில் நாடு பல தடவைகள் முடக்கப்பட்டதன் ஒரு பாகமாக 18 மாத காலம் பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததுடன், அதன் விளைவாக மாணவர்கள் இடைவிலகும் நிலை ஏற்பட்டிருந்ததுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிறுவர் உழைப்பு அதிகரித்து வந்துள்ளது என்பதனை காட்டக்கூடிய ஊர்ஜிதப்படுத்தப்படாத அறிக்கைகள் எனக்குக் கிடைத்திருந்தன. குறிப்பாக இணைய வசதி, மின்சாரம் அல்லது உபகாரணங்கள் போன்றவற்றைப் பிள்ளைகளால் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது; அல்லது வயது வந்தவர்கள்/பெற்றோர்கள் தமது வருமானத்தை இழந்திருக்கும் சந்தரப்பங்கள் என்பவற்றின் போது பிள்ளைகளினால் இணைய வழிக்கூடான கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அத்தகைய பெற்றோர், அதற்குப் பதிலாக தமது பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவதற்கு நிர்பந்திக்கப்பட்டிருந்தனர். மேலும், சிறுவர் ஊழியம் இல்லாத வலயம் ஸ்தாபிக்கப்பட்டமை மிக முக்கியமான ஒரு முன்முயற்சியாக இருந்து வந்த போதிலும், அது பிரத்தியேகமாக ஒரு மாவட்டம் தொடர்பாக மட்டுமே இருந்து வருகின்றது. தற்போதைய இரத்தினபுரி மாவட்ட நிர்வாகம் இந்த சிறுவர் ஊழியம் இல்லாத வலயம் தொடர்பான மாதிரியை அறிந்து வைத்து, அதனை கண்காணித்து, அமுல் செய்து வருகின்றதா என்பது தெளிவாக தெரியவில்லை. நாட்டின் ஏனைய பாகங்களில் இத்தகைய வலயங்கள் இதுவரையில் உருவாக்கப்படவில்லை. இது சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக கணிசமான அளவிலான இடைவெளிகளையும், பலவீனமான நிலைமைகளையும் ஏற்படுத்துகின்றது. சிறுவர் ஊழியம் இல்லாத வலயங்கள் நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் விஸ்தரிக்கப்படப் போவதாக அரசாங்கம் யோசனை தெரிவித்துள்ளது. இது வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டால் ஒரு சாதகமான படிமுறையாக இருந்து வரும்.

மேலும், பிரதானமாக கிராமியப் பிரதேசங்களைச் சேர்ந்த விளிம்பு நிலை பெண்களை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வரும் நுண் நிதி நிறுவனங்களின் திட்டங்களின் விளைவாக, கடன்களை திருப்பிச் செலுத்தும் பொருட்டு 16 வயதிற்குக் குறைந்த சிறுவர்கள் சிறுவர் ஊழியத்தில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர்கள் என என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், நாட்டில் சிறுவர் திருமணங்கள் நிலவி வரும் சந்தர்ப்பங்கள் குறித்தும் எனக்குத் தெரிய வந்துள்ளது. திருமணத்திற்கான சட்ட பூர்வமான வயது 18 வருடங்களாக இருந்து வருவதனால், பொதுவாக சிறுவர் திருமணங்கள் முறையாக பதிவு செய்யப்படுவதில்லை. இத்தகைய சிறுவர் திருமணம் குறிப்பாக பெண் பிள்ளைகளைப் பாதித்து வருவதுடன், அதன் விளைவாக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் பாடசாலைக் கல்வியை இடையில் விட்டு விடுகின்றனர். மேலும், மிக இளவயதிலேயே கர்ப்பம் தரிக்கும் நிலையும் ஏற்படுகின்றது. இது பால்நிலை ஏற்றத்தாழ்வினைத் தக்கவைத்து, அவர்கள் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு உட்படுத்தப்படக்கூடிய ஆபத்தையும் அதிகரிக்கின்றது. ஏனைய சம்பவங்களில், பெண்கள் மிக இளவயதில் கருத்தரிப்பதனையடுத்து பாடசாலையிலிருந்து விலகி, தமது தோழனுடன் சேர்ந்து வாழத் தொடங்குகின்றார்கள். இது மிக இள வயதிலேயே பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதார வசதிகளை அவர்கள் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துவதனையும், குறிப்பாக கிராமப் பிரதேசங்களிலும், தோட்டப் பிரதேசங்களிலும் வாழ்ந்து வரும் பதின்ம வயதினருக்கான ஆதரவுச் சேவைகளை வழங்குவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக் குறிகோள் 8.7 இன் கீழ் 2025 அளவில் அனைத்து வடிவங்களிலுமான சிறுவர் உழைப்பு இல்லாதொழிக்கப்பட வேண்டியிருப்பதனால் மேலே எடுத்துக் காட்டப்பட்ட அவதானிப்புக்கள், சிறுவர் உழைப்பை இல்லாதொழிக்கும் விடயத்தில் இலங்கை அவசரமாக அதன் முயற்சிகளைத் துரிதப்படுத்த வேண்டியுள்ளது என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. இது தொடர்பாக முனைப்புடன் செயற்பட்டு வரும் ஒரு நாடு என்ற முறையில் இலங்கை சமகால அடிமைத்துவ வடிவம் ஒன்றாகக் கருதப்படும் மிக மோசமான சிறுவர் ஊழிய வடிவங்களை அடுத்த 2022 ஆம் ஆண்டில் முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக ஒரு கடப்பாட்டைப் பொறுப்பேற்றுள்ளது. அந்த விதத்தில் இது தொடர்பாக பெருமளவுக்கு அபிலாசைகளைக் கொண்ட குறிக்கோள்களை இலங்கை உருவாக்கிக் கொண்டுள்ளது.

***பெண்கள்***

இலங்கையில் சமகால அடிமைத்துவ வடிவங்களினால் பெண்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோர் விகிதாசார ரீதியில் மற்றவர்களிலும் பார்க்க உயரளவில் பாதிக்கப்பட்டிருப்பதனை

நான் பார்த்தேன். இதில் கணிசமான அளவிலான பால்நிலை ஏற்றத்தாழ்வு, தந்தை வழிச் சமூக மனப்பாங்குகள் மற்றும் பாரபட்ச வடிவங்கள் என்பன ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளன. பெருந்தோட்டங்கள், வீட்டு வேலை மற்றும் ஆடைத்தொழில் துறை போன்ற குறிப்பிட்ட துறைகளைப் பொறுத்தவரையில் அவற்றில் பெரும்பாலானவை கடின உழைப்பு நிலைமைகளை வேண்டி நிற்கும் தொழில் துறைகளாக இருந்து வருவதுடன், கணிசமான அளவில் பெண்களே அத்துறைகளில் தொழில் செய்து வருகின்றார்கள். அதன் காரணமாக, சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு உள்ளாகக்கூடிய அவர்களின் பலவீன நிலை அதிகரிக்கின்றது. பெருந்தோட்டங்களில் தேயிலைக் கொழுந்து பறிப்பதன் மூலம் குறைந்தபட்ச சம்பளங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு பெண்கள் ஆண்களிலும் பார்க்க இரண்டு மடங்கு அதிகமாக வேலை செய்ய வேண்டியுள்ளது. தோட்ட/ பெருந்தோட்ட முகாமைத்துவத்தினால் இலக்குகள் நிர்ணயிக்கப்படுவதுடன், நாள் சம்பளமாக ஒரு நாளைக்கு 1000 ரூபாவை ஈட்டிக் கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட பெருந்தோட்டத்தை பொருத்து பெண்கள் 18 - 22 கிலோகிராம் அளவிலான கொழுந்தைப் பறிக்க வேண்டியுள்ளது. அவர்கள் தமது இலக்கைப் பூர்த்தி செய்யாவிட்டால் கூலிகள் குறைக்கப்படும். அதே போல, ஆடைத் தொழிற்துறையில் வழங்கப்பட்டு வரும் உயரளவிலான வேலை இலக்குகள் பெண் தொழிலாளர்கள் மீது தொடர்ந்தும் அழுத்தத்தைப் பிரயோகித்து வருகின்றன. அதன் பின்விளைவாக, ஒரு சில பெண் தொழிலாளர்கள் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் இலக்குகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கழிவறைக்குச் செல்வதனையும் கூட தவிர்த்து வருகின்றார்கள். அத்தகைய சுரண்டல் சம்பவங்கள் தொழிலாளர்களையும் உள்ளடக்கிய விதத்தில் எம்முடன் உரையாடிய பெருந்தொகையான நபர்களினால் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருந்தன.

என்னுடன் உரையாடிய பெண்கள் மற்றும் ஏனைய பலர் எழுப்பிய பிரதான கரிசனைகளில் ஒன்று, இலங்கையில் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும் பொழுது, கிடைக்கும் குறைந்த சம்பளங்கள் எவ்விதத்திலும் போதியவையாக இருந்து வரவில்லை என்பதாகும். உதாரணமாக, ஆடைத் தொழில் துறையில் வழங்கப்படும் அமெரிக்க டொலர் 120 - 150 மாதச் சம்பளம் சட்ட ரீதியாக குறித்துரைக்கப்பட்டிருக்கும் குறைந்தபட்ச வேதனத்திலும் பார்க்க உயர்வாக இருந்து வந்த போதிலும் குடும்பத்தின் அடிப்படைச் செலவுகளை ஈடு செய்வதற்கு போதியதாக இருந்து வரவில்லை.

நான் முன்னர் குறிப்பிட்ட நுண் நிதிக்கடன் முறை குறிப்பாகக் கிராமியப் பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களையும், பெருந்தொகையான பெண் தலைமைத்துவக் குடும்பங்களையும் பாதித்து வரும் மற்றொரு தீவிரமான பிரச்சினையாகும். அவர்களில் பெரும்பாலானவர்கள் வருமான உருவாக்க வாய்ப்புக்களைக் கொண்டிருக்கவில்லை; தமது குடும்பத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கும் மற்றும் / அல்லது தொழில்களுக்குத் தேவையான நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் பதிவு செய்யப்பட்ட வங்கிகளிலிருந்து அவர்களால் கடன்களைப் பெற முடியாதிருந்து வரும் காரணத்தினால் இன் நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடிவு செய்கின்றார்கள். மிக இலகுவான இரையாக நுண் நிதிக் கம்பனிகள் அவர்களை இலக்கு வைப்பதாக கூறப்படுகின்றது. அந்தக் கம்பனிகளின் வட்டி விகிதங்கள் பெருமளவுக்கு உயர்வாக இருந்து வருவதுடன், வாரத்திற்கு 20 - 30 % வட்டியை அவை அறவிடுகின்றன; அல்லது கம்பனியைப் பொருத்து வட்டி வீதங்கள் மேலும் உயர்வடைகின்றன. பல்வேறு கம்பனிகளின் ஒப்பந்தங்கள் பெண்கள் புரிந்து கொள்ள முடியாத மொழியில் (உதாரணமாக ஆங்கிலத்தில்) எழுதப்பட்டிருப்பதாகவும், அந்த ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதன் மூலம் ஏற்படக்கூடிய தாக்கங்கள் மற்றும் பின்விளைவுகள் குறித்த முழுமையான விளக்கமில்லாமல் அவர்கள் அவற்றில் கையொப்பமிட்டு வருவதாகவும் பலர் என்னிடம் தெரிவித்தார்கள்.

இக்கடன்களின் வட்டி விகிதங்கள் உயர்வாக இருந்து வரும் காரணத்தினால் பெருந்தொகையான பெண்கள் கடன் பொறிக்குள் சிக்கிக் கொள்கிறார்கள். இவை தற்கொலைகளுக்கு வழிகோலியிருப்பதுடன், கடந்த வருடங்களின் போது 200 இற்கு மேற்பட்ட பெண்கள் அவ்விதம் தற்கொலை செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நிர்க்கதி நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் பல பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்கு அல்லது வேலைப்பளு மிகுந்த வீட்டு வேலை போன்ற தொழில்களில் ஈடுபடுவதற்கு நிர்பந்திக்கப்படுவதாகவும் என்னிடம் பலர் தெரிவித்துள்ளார்கள். அத்தொழில்கள் பெருமளவுக்குச் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றைக் கொண்டவையாக இருந்து வருவதுடன், தமது கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொருட்டு அவர்கள் அத்தொழில்களில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மனித வலு ஆட்சேர்ப்பு முகவரகங்கள் என்று அழைக்கப்படும் நிறுவனங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நுண் நிதிக் கம்பனிகளுடன் சம்பந்தப்பட்டிருப்பதுடன், அவர்கள் ஒரு சில சந்தரப்பங்களில் கடன் சுமையில் இருக்கும் பெண்களைச் சுதந்திர வர்த்தக வலயத்தில் அல்லது வேறு இடங்களில் வேலை செய்வதற்கென

அழைத்து வருகின்றார்கள். வாராந்த அடிப்படையில் கடன் தவணைக் கட்டணங்களை வசூல் செய்து வரும் நுண்நிதி நிறுவனங்களின் முகவர்கள் கொடுப்பனவு நியதிகளைத் தளர்த்தும் பொருட்டு வழமையாக பாலியல் சலுகைகளை கோரி வருவதாகவும் கூறப்படுகின்றது. இது தெளிவாகவே அப்பெண்களின் பலவீனமான நிலையைச் சுரண்டும் ஒரு செயலாக இருந்து வருகின்றது.

மேலும், மத்திய கிழக்கு நாடுகளையும் உள்ளிட்ட வெளிநாடுகளில் தொழில் செய்வதற்கென குடிபெயர்ந்து செல்வதற்கு ஆட்களுக்கு அனுசரணை வழங்கும் உப ஆட்சேர்ப்பு முகவரகங்களுடன் பல நுண்நிதிக் கம்பனிகள் கூட்டுச் சேர்ந்திருப்பது போல் தெரிகிறது. அவ்விதம் வெளிநாடு செல்பவர்களுக்கு இந்த முகவர்கள் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்குவதுடன், அத்தொகைகள் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கென பயன்படுத்தப்படுகின்றன. அதாவது, சம்பந்தப்பட்ட பெண்கள் வேலைக்காக வெளிநாடு செல்ல வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவை வழங்கப்படுகின்றன.

சுரண்டல் இயல்பிலான இந்த நுண்நிதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்குமென அரசாங்கம் இதுவரையில் வினைத்திறன் மிக்க, உரிய காலத்திலான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை என்ற விடயம் குறித்து நான் ஆழமாக கரிசனை கொண்டுள்ளேன். அதன் விளைவாக அக்கம்பனிகள் எத்தகைய இடையூறுகளுமில்லாமல் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த உறுப்பினர்கள் நுண்நிதிக் கம்பனிகளுடன் சம்பந்தப்பட்டிருக்க முடியும் என்ற விடயமும் எனக்குத் தெரிய வந்துள்ளது. அதன் காரணமாக இது தொடர்பாக பொலிசாரிடம் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. இது பெண்கள் நீதியையும், நிவாரணங்களையும் பெற்றுக்கொள்வதற்கான இடையூறாக இருந்து வருகின்றது. தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற ஏனைய அமைப்புக்கள் நுண் நிதிக் கம்பனிகளின் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட மனித உரிமை துஷ்பிரயோகங்கள் தொடர்பாக முனைப்பான விதத்தில் முன்வந்து, போதியளவில் புலன் விசாரணைகளை மேற்கொள்வதில்லை.நுண்நிதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான ஒரு முறைமையை ஏற்படுத்துவதற்கென சட்டத் திருத்தம் ஒன்று அறிமுகம் செய்யப்படவிருப்பதாக அரசாங்கம் என்னிடம் தெரிவித்தது. இனியும் தாமதிக்காது அதனைச் செய்ய வேண்டுமென நான் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்.

பெருமளவுக்கு பால்நிலைப்படுத்தப்பட்டிருக்கும் மற்றொரு துறை வீட்டு வேலைத் துறையாகும். இந்தத் துறையில் வேலை செய்து வருபவர்களில் கணிசமான பெரும்பான்மையினர் பெண்கள் மற்றும் இளம் பெண்களாக இருந்து வருவதுடன், இது மிகக் குறைந்தளவில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு தொழில் துறையாக உள்ளது. சாதாரண தேவைகளின் அடிப்படையில் சுகயீன/ வருடாந்த லீவுகளைப் பெற்றுக்கொள்ளல், குறைந்தபட்ச வேதனம் மற்றும் ஏனைய உரித்துக்கள் என்பன இந்தத் துறை தொடர்பாகப் பிரயோகிக்கப்படுவதில்லை போல் தெரிகிறது. இத்துறையில் வேலையில் அமர்த்தப்பட்டிருப்பவர்களின் தொழில் நிலைமைகள் கடுமையானவையாக இருந்து வருவதாகவும், போதியளவிலான சம்பளமோ அல்லது ஓய்வோ இல்லாது அதிகரித்தளவிலான வேலைச் சுமையை அவர்கள் எதிர்கொண்டு வருவதாகவும், பலர் என்னிடம் தெரிவித்தார்கள். அவர்களுக்குத் தேவைப்படும் பொருட்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வழங்கப்படுவதில்லை. உடல் ரீதியான, வாய்மொழி மூலமான மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் கூட இடம்பெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து விதமான பாலியல் அடையாளங்கள் மற்றும் பாலீர்ப்பு போக்குகள் என்பவற்றை கொண்டிருக்கும் பாலியல் தொழிலாளர்கள் பாரபட்சம் மற்றும் சமூகக் களங்கம் என்பவற்றுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்ற விடயம் எனது விஜயத்தின் போது தெரிய வந்தது. அவர்கள் சட்டத்தை அமுல் செய்யும் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் அதிகரித்தளவிலான ஆபத்தை எதிர்கொண்டுள்ளார்கள். சட்டத்தை அமுல் செய்யும் விடயத்தைப் பொறுத்தவரையில் கைது மற்றும் வழக்குத் தொடுத்தல்கள் என்பவற்றுக்கு பாலியல் தொழிலாளர்கள் ஏற்றத்தாழ்வான விதத்தில் இலக்காகக் கொள்ளப்படுவதுடன், இந்த பாலியல் தொழிலாளர்களிடமிருந்து உயரளவிலான கட்டணங்களை அறவிட்டு வரும் முச்சக்கர வண்டிச் சாரதிகள் மற்றும் ஹோட்டல் பணியாளர்கள் போன்றவர்களுக்கு எதிராகவும் உரிய விதத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டு, தண்டனைகள் வழங்கப்படுவதில்லை.

### *வயது முதிர்ந்த /ஓய்வு பெற்ற தொழிலாளர்கள்*

வயது முதிர்ந்த/ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் தமது தொழில் சம்பந்தப்பட்ட பல

பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாக பன்முக தரப்பினர் என்னிடம் கரிசனை தெரிவித்திருந்தார்கள். உதாரணமாக, பெருந்தோட்டத் துறையில் இளைஞர் யுவதிகள் தோட்டத்திற்கு வெளியில் வேலை செய்யும் ஒரு போக்கு நிலவி வரும் காரணத்தினால் ஊழியர் படையில் பெரும்பாலானவர்கள் 50 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருந்து வருகின்றார்கள். அவ்வாறிருந்த போதிலும், அவர்கள் நாளாந்த அடிப்படையில் கடும் உடல் உழைப்பைக் கோரும் வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. போதியளவிலான சுகாதாரப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, அதே போல சுகவீன அல்லது சம்பளத்துடன் கூடிய லீவு என்பன இல்லாத விதத்தில் அவர்கள் இவ்விதம் வேலை செய்ய வேண்டி நேரிடுகின்றது. ஏனைய துறைகளிலும் இதே மாதிரியான அனுபவங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

தெரிவிக்கப்பட்ட மற்றொரு ஆழமான கரிசனை ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் பணிக்கொடை என்பவற்றையும் உள்ளடக்கிய ஓய்வு நிதியங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகும். இத்தகைய கொடுப்பனவுகள் தொழிலாளர்கள் 60 வயதை எட்டும் பொழுது செலுத்தப்பட வேண்டியவையாகும் (ஊழியர் நம்பிக்கை நிதியத்தை ஓய்வு பெறுவதற்கு முன்னரும் கூட மீளப் பெற முடியும்). ஓய்வு பெற்ற ஒரு சில நபர்கள் மீண்டும் வேலைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை இது எடுத்து வந்துள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இந்தப் பிரச்சினைகளை முன்வைத்த பொழுது, அரச முகாமைத்துவத்தின் கீழ் இயங்கிவரும் பெருந்தோட்டங்களில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன தொடர்பான கொடுப்பனவுகள் நீண்ட காலமாகச் செலுத்தப்படாதிருக்கும் விடயத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். மிக விரைவில் இந்தப் பிரச்சினை கவனத்தில் எடுக்கப்படும் என என்னிடம் உறுதிமொழி அளிக்கப்பட்டது. இனியும், தாமதம் இல்லாமல் உடனடியாக இந்த விடயத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டுமென நான் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்.

*குடிபெயர் தொழிலாளர்கள்*

முன்னர் குறிப்பிடப்பட்டதைப் போல எனது விஜயத்தின் போது நான் உள்ளக குடிபெயர் தொழிலாளர்கள் மற்றும் நாடு திரும்பியிருக்கும் குடிபெயர் தொழிலாளர்கள் ஆகியோரின் தொழில் நிலைமைகள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொண்டேன்.

தற்பொழுது நிலவி வரும் குடியகல்வு சட்டகத்தின் கீழ் தொழில் செய்வதற்கு வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்து செல்ல விரும்பும் தனிநபர்கள் அனைவரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் தம்மைப் பதிவு செய்ய வேண்டியிருப்பதுடன், அதற்கென 17,500 ரூபாய் கட்டணமொன்றையும் செலுத்த வேண்டியுள்ளது. இக்கட்டணத்தில் 10 சதவீதம் காப்புறுதிக்கென ஒதுக்கப்படுவதாகவும், 70 சதவீதம் ஆட்சேர்ப்பு முகவரகங்களுக்கு வழங்கப்படுவதாகவும், 20 சதவீதத்தைப் பணியகம் பெற்றுக்கொள்வதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் தகவல்களின் பிரகாரம், வெளிநாடு செல்லும் தொழிலாளர்களுக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் விளக்கமளிக்கப்படுவதுடன்/ பயிற்சி வழங்கப்படுகிறது. அவர்கள் வேலைக்குச் செல்லும் நாட்டில் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டால் சமூக மற்றும் பொருளாதார உதவியும் வழங்கப்படுகின்றது. அவர்கள் மீண்டும் நாடு திரும்பிய பின்னர் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய உதவிகள் என்பவற்றையும் பெற்றுக்கொள்ள முடியும்.

எவ்வாறிருப்பினும், நாடு திரும்பியிருக்கும் குடிபெயர் தொழிலாளர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்புக்களுக்கு ஊடாக தற்போதைய முறைமையில் பல இடைவெளிகள் இருந்து வரும் விடயம் எனக்குத் தெரிய வந்தது: பல்வேறு நாடுகளில் வீட்டு வேலைத் தொழிலாளர்களாக வேலை செய்திருக்கும் ஒரு சில பெண்கள் வேலை செய்யும் இடத்தில் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் என்பன இடம்பெற்றிருக்கும் விடயம் குறித்து அறிக்கையிட்டுள்ளார்கள். சம்பளங்களை பிடித்து வைத்துக் கொள்ளல், நீண்ட வேலை நேரங்கள், உடல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் என்பனவும் இதில் அடங்குகின்றன. இத்தகையத் துஷ்பிரயோகங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டிய முதன்மையான பொறுப்பினை அவர்கள் தொழிலுக்குச் செல்லும் அந்தந்த நாடுகள் கொண்டுள்ளன. அதே வேளையில், இது தொடர்பாக இலங்கையின் தூதுவர் அலுவலகங்கள் மற்றும் கவுன்சில் அலுவலகங்கள் என்பவற்றினால் போதியளவிலான ஆதரவு வழங்கப்பட்டு வரவில்லை என்ற விடயம் குறித்து நான் கரிசனை கொண்டுள்ளேன். அனைத்து அலுவலர்களும் போதியளவில் பயிற்றப்பட்டிருக்கவில்லை. உதவி தேடிச் சென்ற புலம்பெயர் தொழிலாளர்கள் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவங்கள் குறித்த அறிக்கைகளும் எனக்குக் கிடைத்துள்ளன. ஒரு சில தூதுவராலயங்களில் தங்குமிடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அதே வேளையில், அவை போதியவையாக இருந்து வரலவில்லை எனக் கருதப்படுகின்றது.

கொவிட் - 19 பெருந்தொற்றின் மூலம் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. அதன்

காரணமாகப் பெருந்தொகையான தொழிலாளர்கள் போதியளவிலான நிறுவன ரீதியான ஆதரவு இல்லாத நிலையில் கைவிடப்பட்டிருக்கிறார்கள்.

மேலும், தொழிலாளர்கள் குடியகல்வு தொடர்பான தற்போதைய முறைமையில் பரவலான கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகள் இருந்து வருகின்றன. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பணிப்பாளர் சபையில் தொழிற்சங்கங்கள் அல்லது தொழிலாளர்கள் ஆகியோரின் பிரசன்னம் இருந்து வரவில்லை; பிரதானமாக வேலை வாய்ப்பு முகவரகங்கள் அதில் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொண்டுள்ளன. மேலும், தொழிலாளர்கள் செலுத்தும் கட்டணங்களில் பெரும்பாலானவை அந்த முகவரகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இதற்கு எதிர்வினையாற்றும் பொருட்டு பணிப்பாளர் சபையின் உள்ளடக்கத்தைத் திருத்தியமைக்கும் செயன்முறையில் ஈடுபட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதனை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அமுல் செய்ய வேண்டும் என நான் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் (SLBFE) 2013 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட குடும்பப் பின்னணி அறிக்கை (FBR) தொடர்பாகவும் ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகின்றேன்: அது ஐந்து வயதிற்குக் குறைந்த குழந்தைகளைக் கொண்டிருக்கும் பெண்கள் வீட்டு வேலைக்கென வெளிநாடு செல்வதனை தடுக்கும் ஒரு நிபந்தனையைக் கொண்டுள்ளது. எனது விஜயத்தின் போது கிடைத்த தகவல்களின் பிரகாரம், இந்த நிபந்தனை பெண் குடிபெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் மீது எடுத்து வந்திருக்கும் தாக்கம் காரணமாக சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதி சர்ச்சைக்குரியது என்ற விடயம் நிரூபிக்கப்பட்டிருந்தது. ஐந்து வயதிற்குக் குறைந்த குழந்தைகளைக் கொண்டிருக்கும் பெண்கள் உரிய வழிமுறைகளுக்கு ஊடாக வெளிநாடு செல்வதற்கென விதிக்கப்பட்டிருக்கும் வரையறைகள், சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றை அதிகரிக்கும் விதத்தில் முறைகேடான முறைகளுக்கு ஊடாக வெளிநாடு செல்லும் ஆபத்தை அதிகரித்துள்ளன. மேலும், இந்த ஒழுங்குவிதி பால்நிலை அடிப்படையில் பாரபட்சம் காட்டும் ஓர் ஒழுங்குவிதியாக இருந்து வருவதாக கருதப்படுவதுடன், அதன் காரணமாக அது திருத்தப்படுதல் வேண்டும்.

மேலும், காப்புறுதிக் கொடுப்பனவுகளுக்கென பெரும்பாலான சந்தர்ப்பங்களில் போதியளவில் பணத் தொகைகள் ஒதுக்கப்படுவதில்லை என பல்வேறு பங்கீடுபாட்டாளர்களும் என்னிடம் தெரிவித்திருந்தார்கள். காயங்கள் மற்றும் நோய்கள் என்பன தொடர்பாக தொழிலாளர்களுக்கு எப்பொழுதும் போதியளவிலான கொடுப்பனவுகள் கிடைப்பதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாடு திரும்பும் தொழிலாளர்களுக்கான மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டம் மூலம் அவ்விதம் நாடு திரும்பியிருக்கும் குடிபெயர் தொழிலாளர்களுக்குப் போதியளவிலான சமூக பொருளாதார உதவிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்ற விடயம் என்னிடம் தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தப்பட்ட அரசாங்க அமைப்புக்களிடமிருந்து கிடைத்த தகவல்களுக்கு முரணானதாகும். கொவிட் - 19 பெருந்தொற்று நிலவி வரும் சூழ்நிலையில் குறிப்பாக சவால்களை எடுத்து வரும் ஒரு நிலைமைக்கு இது வழிகோலுகின்றது. தம்மையும் தமது குடும்பத்தையும் பராமரிப்பதற்கு எத்தகைய வசதிகளும் இல்லாமல் இலங்கைக்கு திரும்பி வந்திருக்கும் பெருந்தொகையான குடிபெயர் தொழிலாளர்கள் இந்த நிலைமைகளை எதிர்கொள்வார்கள்.

நாடு திரும்பிய தொழிலாளர்களுக்குப் போதிய ஆதரவு இல்லாத நிலையில், அவ்விதம் நாடு திரும்பிய பெண் குடிபெயர் தொழிலாளர்கள் மீண்டும் வெளிநாடு செல்வதற்கும், பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்கும், வீட்டு வேலை அல்லது ஆடைத் தொழில் துறை போன்ற குறைந்த சம்பளங்களைக் கொண்ட துறைகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்கள்.

இறுதியாக, அதிகாரக்கெடுபிடிகள் மற்றும் உயர் கட்டணங்கள் என்பன காரணமாக பெரும்பாலான தொழிலாளர்கள் பணியகத்தில் தம்மைப் பதிவு செய்வதில்லை என்ற விடயம் என்னிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது இதற்கான ஒரு மாற்று வழியாக அரசாங்கத்தினால் பொருத்தமான விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தப்படாதிருக்கும் உப முகவர்களுக்கு ஊடாக பலர் வெளிநாடு செல்கிறாரகள். இந்த முகவர்கள் பொதுவாகப் பொய்யான தகவல்களை வழங்குவதுடன், ஆட்களை வியாபாரம் செய்வதில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்றும், பெண் குடிபெயர் தொழிலாளர்களிடமிருந்து பாலியல் சலுகைகளை நாடுகிறார்கள் என்றும் கூறப்படுகின்றது. உப முகவர்களைப் பயன்படுத்தும் விடயத்தைக் கவனத்தில் எடுப்பதற்கென தற்பொழுது ஒரு சட்ட ரீதியான சட்டகம் இருந்து வரவில்லை. வெகு விரைவில் இந்த நிலைமை

நிவர்த்திக்கப்படுதல் வேண்டும்.

***இனத்துவ சிறுபான்மையினர்***

இலங்கையில் சமகால அடிமைத்துவ வடிவங்கள் ஓர் இனத்துவப் பரிமாணத்தைக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன். குறிப்பாக, 200 ஆண்டுகளுக்கு முன்னர் பெருந்தோட்டத் துறையில் வேலை செய்வதற்கென இந்தியாவிலிருந்து இங்கு அழைத்து வரப்பட்ட மலையகத் தமிழர்கள் தமது பூர்வீகத்தின் அடிப்படையில் தொடர்ந்தும் பன்முக பாரபட்ச வடிவங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

இது அடிமைச் சேவகம் இடம்பெறும் நிலைமைகளுக்கும், ஏனைய சுரண்டல் மற்றும் துஷ்பிரயோக வடிவங்கள் என்பவற்றுக்கும் வழிகோலியுள்ளது. உதாரணமாக, பெருந்தோட்டத் துறையில் வாழ்ந்து வரும் மலையகத் தமிழர்கள் எதிர்கொண்டு வரும் மிக முக்கியமான பிரச்சினை காணிகளைச் சொந்தமாக வைத்துக்கொள்ள முடியாதிருப்பதாகும். இதன் காரணமாக அவர்கள் ''லயன் அறைகளில்'' வசிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதுடன், இந்த வசிப்பிடங்கள் காலனித்துவக் கால கட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டவையாகும். கண்டி மாவட்டத்திற்கான எனது விஜயத்தின் போது நான் இந்த வீடுகளைப் போய் பார்வையிட்டதுடன், மிகவும் கண்ணியக் குறைவான அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகள் குறித்து பாரதூரமாகக் கவலையடைந்தேன். 10 x 12 அடி பரப்பளவைக் கொண்ட ஒரு சிறிய இடத்தை 5 – 10 ஆட்கள் வரையில் பொதுவாகப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருப்பதாக என்னிடம் கூறப்பட்டது. பெரும்பாலான லயன் வீடுகள் யன்னல்களையோ அல்லது பொருத்தமான சமையல் அறைகளையோ கொண்டிருக்கவில்லை. மேலும், வரையறுக்கப்பட்ட அளவிலான கழிப்பறைகளே உள்ளன. அதன் விளைவாக, ஒரு கழிப்பறையைப் பல குடும்பங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குழாய் நீர் வசதி இல்லாதிருப்பதுடன், ஒரு சில லயன் வீடுகளில் மின்சார வசதியும் இல்லை. (உதாரணமாக, இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன்) ஒரு சில மாற்று வீடுகள் அமைக்கப்பட்டிருப்பதனை நான் அறிந்துள்ளேன். அதே வேளையில், இன்றைய நாள் வரையில் லயன் அறைகளில் மிகவும் மனிதாபிமானமற்ற, சீர்கேடான விதத்தில் தொழிலாளர்கள் தொடர்ந்து வாழ்ந்து வருவது குறித்து நான் அதிர்ச்சியடைந்தேன்.

மற்றொரு பிரச்சினை மொழியாகும். சிங்களம் மற்றும் தமிழ் என்பன இலங்கையின் உத்தியோகபூர்வ மொழிகளாக இருந்து வந்தாலும் கூட, தமிழ் தொழிலாளர்கள் தாம் எதிர்கொள்ள நேரிடும் அத்துமீறல்கள் தொடர்பாக சில சந்தரப்பங்களில் பொலிஸ் போன்ற அரசாங்க அமைப்புக்களிடம் முறைப்பாடுகளை முன்வைக்க முடியாதிருந்து வருவதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது. பெரும்பாலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியை மட்டும் பேசுபவர்களாக இருந்து வருவதுடன், சிங்களத்தில் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு அவர்களைப் பலவந்தப்படுத்துகிறார்கள். இது நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அறிக்கையிடப்பட்டுள்ளது. தாம் புரிந்து கொள்ளும் மொழியில் போதியளவிலான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை பெருந்தொகையான தொழிலாளர்கள் கொண்டிருக்கவில்லை. சமகால அடிமைத்துவ வடிவங்களையும் உள்ளடக்கிய விதத்தில் தமது உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் நீதி மற்றும் நிவாரணங்கள் என்பவற்றைக் கோருவதற்கான வழிமுறைகள் அவர்களுக்கு இல்லாமல் போகின்றது. இது சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் போன்ற சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொள்வதிலிருந்தும் பாதிக்கப்பட்டவர்களை தடுத்து வருகின்றது என்றும் என்னிடம் கூறப்பட்டிருந்தது.

இலங்கையில் தொடர்ந்து நிலவி வருவதாகக் கூறப்படும் சாதி அடிப்படையிலான பாரபட்சம் குறித்த பிரச்சினையையும் நான் எழுப்ப விரும்புகின்றேன். உதாரணமாக, வட மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பெருந்தொகையானவர்கள் விவசாயத் தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான ஒரு காணியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்து வருகின்றார்கள். மேலும், அவர்களுக்குக் கிடைக்கும் நீர் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் என்பனவும் வரையறுக்கப்பட்டுள்ளன. அரசாங்க உத்தியோகத்தர்களையும் உள்ளிட்ட விதத்தில் ஆதிக்கச் சாதிகளைச் சேர்ந்த தனிநபர்களினால் பயன்படுத்தப்படும் மனதைப் புண்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்களையும் உள்ளடக்கிய விதத்தில் வேலை இடத்தில் துன்புறுத்தல் சம்பவங்கள் நிகழ்ந்து வரும் விடயங்கள் என்னிடம் அறிக்கையிடப்பட்டுள்ளன. ஒடுக்கப்பட்ட சாதிகளைப் பொறுத்தவரையில் பதவி உயர்வுகளுக்கான வாய்ப்பும் மிகக் குறைவாக இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது. ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் சமூகங்கள் ஆகியோருக்கு எதிரான தொடர்ச்சியான வன்முறைகள் நிகழ்த்தப்பட்டு வரும் சம்பவங்களும் இருந்து வருகின்றன. சாதி தொடர்பான பிரச்சினை மௌனிக்கச் செய்யப்பட்டிருப்பதாகவும், அதிகாரிகள் மற்றும் சமூகங்கள் ஆகிய தரப்புக்களைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினையை உரிய விதத்தில் கவனத்திலெடுப்பதில் ஒரு தயக்கம் நிலவி வருகின்றது என்றும் கூறப்படுகின்றது. ஒடுக்கப்பட்ட குடித்தொகையினருக்கு எதிராக

மேற்கொள்ளப்படும் பாரபட்சம் மற்றும் துஷ்பிரயோகம் போன்ற இத்தகைய செயல்கள் குறித்து நான் கவலைப்படுகின்றேன். ஏனெனில், அவை ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கண்ணியமான வேலைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை வரையறுத்து வருவதுடன், அதன் மூலம் சமகால அடிமைத்துவ வடிவங்கள் தோன்றக்கூடிய ஆபத்தை அதிகரிக்கின்றது.

***இராணுவமயமாக்கல் மற்றும் சிவில் சமூக வெளி சுருங்கி வருதல்***

பன்முக பங்கீடுபாட்டாளர்களுடன் நான் நடத்திய சந்திப்புக்களின் போது தேயிலைத் தோட்டங்கள் மற்றும் ஆடைத் தொழிற்சாலைகள் போன்ற தனியார் துறை வணிக நிறுவனங்களில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் மீண்டும் தொழிலில் அமர்த்தப்படுவது குறித்த அறிக்கைகள் எனக்குக் கிடைத்துள்ளன. இது தொழிலாளர்களுக்கு மத்தியில் அச்சமூட்டும் ஒரு கலாசாரத்தை உருவாக்குவதுடன், தொழிலாளர்கள் மீதான உறுதியான கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுவது குறித்த ஒரு கருத்தையும் வெளிப்படுத்துகின்றது. சிவில் சமூகப் பிரதிநிதிகள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் தொடர்ச்சியாகத் துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல் என்பவற்றுக்கு உள்ளாக்கப்பட்டு வரும் விடயமும் என்னிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஒன்றுகூடும் சுதந்திரம் தொடர்பான கொவிட் சம்பந்தப்பட்ட வரையறைகளின் பிரயோகத்திற்கு ஊடாக நிகழ்த்தப்படும் துன்புறுத்தல்களையும் உள்ளடக்கிய விதத்தில் சிவில் சமூகத்திற்கான இடைவெளி சுருங்கி வரும் விடயமும் என்னிடம் தெரிவிக்கப்பட்டது. அது நாட்டில் செயல் முனைப்பு மிகுந்த சிவில் சமூகம் மற்றும் தொழிற்சங்கங்கள் என்பவற்றின் செயற்பாட்டிற்கு இடையூறாக இருந்து வரும் காரணத்தினால் இந்த விடயம் எனக்கு கவலையளிப்பதாக இருந்து வருகின்றது.

**மேலதிக அவதானிப்புக்கள்**

- பொதுவாகச் சொல்வதானால், இலங்கையில் சமகால அடிமைத்துவ வடிவங்கள் மற்றும் அது சம்பந்தப்பட்ட நடைமுறைகள் என்பன தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் வகை பிரிக்கப்பட்ட தரவுகள் குறைவாக இருந்து வரும் விடயத்தை நான் அவதானித்துள்ளேன்.

- மேலும், மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட துறைகளில் தொழில் பரிசோதனைகள் ஒன்றில் ஒழுங்காக இடம்பெறுவதில்லை; அல்லது அவை வினைத்திறன் மிக்க விதத்தில் இடம்பெறுவதில்லை என்ற விடயம் என்னிடம் தெரிவிக்கப்பட்டது. ஒரு சில சந்தர்ப்பங்களில் பரிசோதகர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகிய தரப்புக்களுக்கு இடையில் நிலவும் கூட்டும் இதற்கு ஒரு காரணமாகும்.

- முன்னர் குறிப்பிடப்பட்டதைப் போல, எழுப்பப்பட்ட மற்றொரு கரிசனை பண வீக்கத்தைக் கருத்தில் கொள்ளாத விதத்திலான குறைந்தளவிலான சம்பளங்கள் தொடர்பானதாகும். மாதாந்த குறைந்தபட்ச வேதனம் 2021 ஆகஸ்ட் மாதம் ரூ. 16,000 ஆக அதிகரிக்கப்பட்ட போதிலும், தமது குடும்பங்களைப் பராமரிப்பதற்கு இத்தொகை போதுமானதாக இருந்து வரவில்லை என என்னுடன் உரையாடிய பல நபர்கள் தெரிவித்திருந்தார்கள். வீட்டு வேலைத் தொழிலாளர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாளொன்றுக்கு ரூ. 500 போன்ற குறைந்தளவிலான தொகையையே பெற்றுக்கொள்கிறார்கள். இது இந்தத் துறையில் தொழில் செய்து வரும் பல பெண்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோர் உயரளவிலான சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள் என்பதனை காட்டுகின்றது.

- பெருந்தோட்டத் துறையின் சில பாகங்கள், வீட்டு வேலைத் துறை மற்றும் ஏனைய வேலை வாய்ப்பு வடிவங்கள் என்பன முறைசாராத பொருளாதாரத்திற்குள் இருந்து வருகின்றன. அது அத்துறைகளில் வேலை செய்பவர்கள் தொழில் சுரண்டல் மற்றும் பாலியல் சுரண்டல் என்பவற்றுக்கு உள்ளாகக் கூடிய நிலையையெடுத்து வருகின்றது. அத்தகைய தொழில்கள் தொடர்பாக ஒப்பந்தங்கள் இருந்து வருவதில்லை. அதன் காரணமாக, முறைசாராத துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் சுகயீன/ வருடாந்த லீவு போன்ற அனுகூலங்களைப் பெற முடியாதவர்களாக இருந்து வருகின்றனர்.

- எனது விஜயத்தின் போது வணிகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ நா

வழிகாட்டும் கோட்பாடுகளுடன் இணைந்த விதத்தில் வணிக நிறுவனங்களின் தரப்பில் எந்த அளவுக்கு அரசாங்கம் உரிய கவனத்தை முனைப்பாக மேம்படுத்தி வருகின்றது என்பதனை எம்மால் கண்டறிந்து கொள்ள முடியவில்லை.

- ஊழியச் சுரண்டலுக்குள்ளாக்கப்படுபவர்கள் நீதி மற்றும் நிவாரணங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளும் விடயத்தில் பன்முக வரையறைகளை எதிர்கொண்டுள்ளார்கள். இது தொடர்பாகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களிடம் போதியளவில் தகவல்கள் இல்லாதிருப்பதே இதற்கான காரணமாகும். குடித்தொகையைச் சேர்ந்த அனைவருக்கும் துல்லியமான தகவல்களை வழங்கும் அரசாங்கத்தின் முயற்சியின் வினைத்திறன் மிக்க தன்மை தொடர்பாக இது கேள்விகளை எழுப்புகின்றது. இது வரையறுக்கப்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யும் நிலைமைக்கு வழிகோல முடியும்: உதாரணமாக, 1999 ஆம் ஆண்டிற்கும், 2019ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப் பிரிவில் நியாயமற்ற ஊழிய நடைமுறைகள் குறித்து 1999 இன் கைத்தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் அதிகார அமைப்புக்களிடம் 16 வழக்குகள் மட்டுமே எடுத்து வரப்பட்டிருந்தன. சான்றுகளை வழங்கும் விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களின் மீது நியாயமற்ற அளவிலான ஒரு சுமை சுமத்தப்படுகின்றது என்பதே இங்கு பிரச்சினையாகயிருப்பது போல் தெரிகிறது.

**<u>பூர்வாங்கப் பரிந்துரைகள்</u>**

நாட்டில் சமகால அடிமைத்துவ வடிவங்களைத் தடுப்பதற்கும், கவனத்தில் எடுப்பதற்குமென பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றும் விடயத்தைக் கவனத்திலெடுக்க வேண்டுமென நான் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்:

- சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட முத்தரப்பு சுயாதீன பொறிமுறை ஒன்றுக்கூடாக தற்பொழுது பிரயோகிக்கப்படும் தேசிய குறைந்தபட்ச வேதனத்தின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுதல்; பணவீக்கம் மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு என்பவற்றுடன் இணைந்த விதத்தில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளல் ;
- முறைசாரா பொருளாதாரத்திற்குள் இருந்து வரும் வீட்டு வேலை மற்றும் ஏனைய துறைகள் என்பவற்றைத் தொழில் சட்டத்திற்குள் உள்வாங்குவதன் மூலம் முறைப்படுத்துதல்;
- மிக மோசமான சிறுவர் உழைப்பு வடிவங்களை 2025ஆம் ஆண்டிற்குள் முடிவுறுத்துதல்;
- பிள்ளைகள் பாடசாலைக்குள் வைக்கப்பட்டிருப்பதனையும், எத்தகைய பாரபட்சமும் இல்லாமல் அனைவரும் தரமான கல்வியைச் சமமாக அணுகக் கூடியதாகயிருந்து வருவதனையும் உறுதிப்படுத்துதல். குடும்பங்களுக்கு அகிலம் தழுவிய சிறுவர் பயன்களை வழங்குதல்;
- சமகால அடிமைத்துவ வடிவங்களையும் உள்ளடக்கிய விதத்தில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தற்போதைய முறைப்பாட்டு முறைமைகளைப் பலப்படுத்துதல். அது பெண்கள், பிள்ளைகள், இனத்துவச் சிறுபான்மையினர் ஆகிய அனைவரும் அணுகக் கூடியவதாக இருந்து வர வேண்டும்;
- நுண்நிதிக் கம்பனிகளின் நடத்தை தொடர்பாக பொருத்தமான, சுயாதீனமான புலன் விசாரணைகளை நடத்துதல். நியாயமற்ற மற்றும் அதி உயர் வட்டி விகிதங்களைக் கொண்ட கடன்களைப் பதிவழிப்புச் செய்தல்; மற்றும் வட்டி விகித உச்ச வரம்புகளையும் உள்ளடக்கிய விதத்தில் அக்கம்பனிகள் மீது வினைத்திறன் மிக்க கட்டுப்பாட்டு மற்றும் கண்காணிப்பு முறைகளை அறிமுகம் செய்து வைத்தல்;

- சேமிப்பு மற்றும் கடன் (சிக்கன) சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (பிராந்திய அபிவிருத்தி வங்கிகள்) என்பவற்றுக்கூடாக கட்டுபடியாகக்கூடிய கடன் வசதிகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல்;

- போதியளவிலான வளங்களை ஒதுக்குவதன் மூலம் தொழில் பரிசோதனை முறையைப் பலப்படுத்துதல் மற்றும் ஒழுங்கான அடிப்படையில் வினைத்திறன் மிக்க தொழில் பரீட்சிப்புக்களை நடத்துதல். அது தொழில் சுரண்டலை மேற்கொண்டு வரும் நபர்கள் அதற்கு பொறுப்புக்கூற வைக்கும் நிலையையெடுத்து வரும்.

- சமகால அடிமைத்துவ வடிவங்களை முன்னரே கண்டறிந்து கொள்வதற்கு நாடெங்கிலும் தொழில் பரிசோதனை அலுவலகத்தின் நடமாடும் அலகுகளை வினைத்திறன் மிக்க விதத்தில் சேவையில் அமர்த்துதல்; குறிப்பாகக் கிராமியப் பிரதேசங்களில் இடம்பெற்றும் சமகால அடிமைத்துவ முறைகளை முன்னரேயே இனங்கண்டு கொள்வதற்கென அதனை மேற்கொள்ளல்;

- தொழில் குடியகல்வு தொடர்பாகப் பெருமளவுக்கு வெளிப்படையான, வினைத்திறன் மிக்க தொழிலாளர் நட்பு முறைமை ஒன்றை ஸ்தாபித்தல்;

- குடிபெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் ஒரே இடத்தில் அனைத்துச் சேவைகளையும் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு பிரத்தியேக அமைப்பை ஸ்தாபித்தல்; மற்றும் வேலைக்குச் செல்லும் நாடுகளில் ஊழியச் சுரண்டல் இடம்பெறும் ஆபத்து தொடர்பாக அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்; மற்றும் குடியகல்வு தொழிலாளர்களுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல். பாதுகாப்பான குடிபெயர்வை மேம்படுத்தும் பொருட்டு இத்துறைக்கென போதிய அளவிலான வரவுசெலவுத்திட்ட நிதிகளை ஒதுக்குதல்;

- தொழிலுக்கென வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ய விரும்பும் இலங்கைப் பிரஜைகளைப் பாதிப்புக்கு உள்ளாக்கும் உப ஆட்சேர்ப்பு முகவர்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை அறிமுகம் செய்து வைத்தல்;

- வெளிநாடுகளில் தொழில் செய்து வரும் புலம் பெயர் தொழிலாளர்களை இலங்கைக்கு எடுத்து வருதல் மற்றும் மீள் ஒருங்கிணைத்தல் என்பவற்றின் வினைத்திறனை உயர்த்துதல்;

- சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள், ஏனைய மனித உரிமைகள் பாதுகாவலர்கள் ஆகிய தரப்புக்களுக்கான சிவில் சமூக வெளியை உத்தரவாதப்படுத்துதல்; அந்த நிலையில் அவர்கள் கருத்து வெளியீட்டுச் சுதந்திரம், அச்சமின்றி ஒன்று கூடி அமைப்புக்களில் இணைந்து கொள்ளும் சுதந்திரம், பழிவாங்குதல், அச்சுறுத்தல் மற்றும் கண்காணிப்பு என்பவற்றிலிருந்து சுதந்திரம் என்பவற்றை அனுபவிக்க முடியும் ;

- தொழிலாளர்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகிய தரப்புக்களுக்கு மத்தியில் ஓர் அச்சக் கலாசாரத்தை உருவாக்கியிருக்கும் ஊழியர் படையை இராணுவமயமாக்கும் நிலைமையைக் கவனத்திலெடுத்தல் ;

- பாலியல் தொழிலாளர்கள் ஏற்றத்தாழ்வான விதத்தில் இலக்காகக் கொள்ளப்படுவதனை தடுப்பதற்கும், அவர்கள் உயரளவில் சுரண்டப்படுவதனைத் தடுப்பதற்கும் என பாலியல் தொழிலை குற்றச் செயல் பட்டியலிலிருந்து நீக்குதல்;

- பல்தேசிய கம்பனிகளையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கையில் இயங்கி வரும்

அனைத்து வணிக நிறுவனங்களும் வணிகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ நா வழிகாட்டல் கோட்பாடுகளுக்கு மதிப்பளிப்பதனை உறுதிப்படுத்துதல்;

- தமது மோசமான மனித உரிமைத் தாக்கங்களை அடையாளம் கண்டு, தடுத்து, தணித்து, அவற்றுக்குப் பொறுப்புக்கூறும் விடயத்தை அவை எவ்வாறு கையாள்கின்றன என்பதனை அடையாளம் கண்டுகொள்வதற்கு வணிக தொழில் முயற்சிகள் மனித உரிமைகள் தொடர்பாக உரிய கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்;

- அனைத்து தொழிலாளர்களினதும் - குறிப்பாகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் - வாழ்க்கை நிலைமைகளை விருத்தி செய்தல் ;

- இன மற்றும் சாதி அடிப்படையிலான பாரபட்சத்தை வினைத்திறன் மிக்க விதத்தில் கையாளல்; அது இலங்கையில் சமகால அடிமைத்துவ முறைகள் உருவாவதற்கு முக்கிய காரணியாக இருந்து வருகின்றது;

- சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்கும், கூட்டு முடிவுகள் எடுப்பதனை இயலச் செய்யும் பொருட்டு, சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர் ஆகிய தரப்புக்கள் அரசாங்கத்துடன் பொருத்தமான விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதனை இயலச் செய்யும் முகமாகப் பன்முக பங்கீடுபாட்டாளர் ஒன்றியம் ஒன்றை ஸ்தாபித்தல்.

முடிவாக அனைத்து தொழிலாளர்களையும் பலவந்த ஊழியம் மற்றும் ஏனைய நவீன அடிமைத்துவ வடிவங்கள் என்பவற்றிலிருந்து பாதுகாப்பதற்குச் சட்டங்கள் மட்டும் போதியதாக இருந்து வரவில்லை என்ற விடயத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். அவை செயற்பாடுகள் மூலம் பலப்படுத்தப்படுதல் வேண்டும்; அரசியல் விருப்பு அவற்றுக்கு கிடைக்க வேண்டும்; வினைத்திறன் மிக்க விதத்தில் செயற்படும் பொருட்டு அவை தேவையான பொருள் மற்றும் மனித வளங்கள் என்பவற்றின் மூலம் வலுப்படுத்தப்படுதல் வேண்டும். சட்டத்தை அமுல் செய்யும் விடயத்தில் இவ்விதம் கவனம் செலுத்துவதுடன் இணைந்த விதத்தில், வினைத்திறன் மிக்க பாதுகாப்பு மற்றும் தடுப்பு வழிமுறைகளும் எடுத்து வரப்படுதல் வேண்டும்.

அனைவரையும் உள்வாங்கும் சமுதாயம் ஒன்றை உருவாக்கி, பராமரித்து வருவது அனைவரும் கண்ணியமான வேலையை அணுகுவதனை உறுப்படுத்துவதற்கும், சமகால அடிமைத்துவ வடிவங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் அத்தியாவசியமானதாக இருந்து வருகின்றது எனவும் நான் நம்புகிறேன்.

உங்களுடைய கவனத்திற்கு நான் நன்றி தெரிவிப்பதுடன், இந்தப் பயணத்தின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்த பங்கீடுபாட்டாளர்களுக்கும், தனிநபர்களுக்கும் மீண்டும் ஒரு முறை எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது பணிப்பாணை தொடர்பான இந்தப் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்து இணைந்து செயற்படுவதற்கு நான் எதிர்பார்க்கின்றேன்.